மன்னார்குடி நகராட்சி

மன்னார்குடி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திருமதி. S.N. சியமளா

நக.எண்.1511/2025/ எப்1 நாள். 27. 06.2025

பொருள் : மன்னார்குடி நகராட்சி வார்டு-1, பிளாக்-70, புதிய நகரப்புல எண்-18, 24/7, 19/4பழைய நகரளவை எண். 461, 459Part, 460 Part, 427 ல் அமைந்துள்ள 4308.20ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு – இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1. திரு. கோ. பாலசுப்பிரமணியன், த/பெ. கோவிந்தராஜ், 1/127, முனைதிரியர் தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா அவர்களின் விண்ணப்பம் நாள். 30.09.2024
2. தான பத்திர ஆவண எண். 2873/2024.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களின் கடித நக.எண். 21075/2024/TVR/ நாள்.04.04.2024 / TCP மற்றும் மனைப்பிரிவு வரைபட அனுமதி ம.வ/மா.ந.ஊ.அ (TCP) SWP எண். 45/2024
4. மன்னார்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். 06.06.2025
5. நகர்மன்ற தீர்மான எண். 158 நாள். 10.06.2025

உத்திரவு :

மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு-1, பிளாக்-70, புதிய நகரப்புல எண்-18, 24/7, 19/4 பழைய நகரளவை எண். 461, 459Part, 460 Part, 427 ல் அமைந்துள்ள 4308.20ச.மீ பரப்பளவு கொண்ட இடத்திற்க்கு மனைப்பிரிவு அனுமதி கோரி பார்வை (1)ல் கண்டுள்ள மனைப்பிரிவு உரிமையாளர் திரு. கோ. பாலசுப்பிரமணியன் நகர ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பித்ததை தொடர்ந்து பார்வை 3ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களின் கடித நக.எண் 21075/2024/TVR/2024/TCP நாள்.04.04.2024 / TCP மற்றும் மனைப்பிரிவு வரைபட அனுமதி ம.வ/மா.ந.ஊ.அ (TCP) SWP எண். 45/2024என எண்ணிட்டு மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பார்வை (3)ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துறையினரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் படி அடிப்படை வசதிகள் நல்ல முறையில் முடிக்கப்பட்டது என பார்வை 4ல் கண்டுள்ள நகராட்சி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகர் ஊரமைப்பு துறையின் மனைப்பிரிவு வரைப்படத்தின் படி உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய சாலை மற்றும் பொது உபயோக இடம் நகராட்சிக்கு பார்வை 2ல் காணும் இனாம் சாசனம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு, ஆணையர் மன்னார்குடி நகராட்சி பெயரிலும் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் மேற்பார்வை பொறியாளர் பெயரிலும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்தியும், மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு காலி மனை வரி விதிப்பு செய்து பார்வை 5ல் கண்டுள்ள மன்றத் தீர்மானத்தின் படி மனைப்பிரிவு அனுமதி வழங்க இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவாரூர் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஆணையர்

மன்னார்குடி நகராட்சி

27/6/2025.

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்

மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுநர்

திரு. கோ. பாலசுப்பிரமணியன், த/பெ. கோவிந்தராஜ், 1/127,

முனைதிரியர் தெரு, பைங்காநாடு கிராமம்,

மன்னார்குடி தாலுக்கா

நகல்

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் தகவலுக்கு

2. நகர சார் ஆய்வாளர் நில அளவை பதிவேட்டில் ஆணையர் மன்னார்குடி நகராட்சி பெயரில் தானமாக வழங்கப்பட்ட பொது இடத்தினை உரிய சர்வே ஆவணங்களில் மாற்றம் செய்ய மனைப்பிரிவு வரைபடம், பட்டா நகல் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. நகராட்சி பொறியாளர், மன்னார்குடி அவர்களின் மேல் நடவடிக்கைக்கு

சிறப்பு நிபந்தனைகள்

1. மனைப்பிரிவு உரிமைதாரர் மனைப்பிரிவில் உள்ள சாலைகளை 5 ஆண்டுகள் அல்லது 60 சதவீதம் மனைகள் விற்பனை செய்யும் காலம் ஆகியவற்றில் அதிகமாக உள்ள காலம் வரை சாலைகளை பராமரிக்க வேண்டும்.
2. மனைப்பிரிவு உரிமைதாரர் மனைப்பிரிவு இடத்திற்கு உரிய வரி விதிப்பு செய்ய வேண்டும்.
3. மனைப்பிரிவு உரிமைதாரர் மனைப்பிரிவு அமையப்பட்டுள்ள இடத்தில் அதன் உரிமை மீது ஏதேனும் பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் அதற்கு மனைப்பிரிவு உரிமைதாரரே முழு பொறுப்பாகும்.
4. மனைப்பிரிவு உரிமைதாரர் நகர் ஊரமைப்பு துறை அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் ஆகியவற்றை முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

ஆணையர்,

மன்னார்குடி நகராட்சி

27/6/2025.